www.kalvisolai.com

# மேல்நிலை முதலாம் ஆண்டு

## பொதுத் தமிழ் – இரண்டாம் தாள்

## மாதிரி வினாத்தாள்

நேரம் : 2 ½ மணி மதிப்பெண்: 90

### பகுதி – I

**பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை தருக.** 20 x 1 = 20

1. கும்பாபிஷேகம் பூர்த்தியாயிற்று என்றார்.
(வடமொழிச் சொற்களை நீக்கி நல்ல தமிழில் எழுதுக).

2. பெட்டி கடையிலே வெற்றிலைக்கு சுண்ணாம்பு கேட்டு வா.
(வல்லின மெய்களை இட்டு எழுதுக).

3. ரெயின் வாட்டர் ஹார்வெஸ்டை அனைவரும் செயல்படுத்த வேண்டும்.
(ஆங்கிலச் சொல்லை நீக்கி இனிய தமிழில் எழுதுக).

4. பேறுந்து நிருத்துமிடத்தில் மக்கள் கூடினர்.
(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக).

5. பனந்தோட்டத்தில் ஆந்தை அகவுவது கேள்.
(மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக).

6. அலை –– அழை
(பொருள் வேறுபாடறிக)

7. சித்தநாழி உட்காார்; வந்துவிடுகிறேன்.
(கொச்சைச் சொற்களைத் திருத்துக).

8. குழந்தைத் திருமணம் அரசால் தடை செய்யப்பட்டன.
(வாக்கியப் பிழையை நீக்குக).

9. இ.ஆ.ப. (விரிவாக்கம் தருக.)

www.kalvisolai.com

10. பல்லியில் மணி ஒளித்தது.
(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக).

11. மாணவர்களே புதிய கல்வி முறையைப் பின்பற்றுங்கள் என்றார் ஆசிரியர்
(பொருத்தமான நிறுத்தக் குறியிட்டு எழுதுக).

12. மாணவர்கள் நூலகங்களை நாடி செல்ல வேண்டும்.
(வல்லின மெய்களை இட்டு எழுதுக).

13. அமிர்தம் போல் வர்ஷித்த மழை கண்டு ஜனங்கள் சந்தோஷம் அடைந்தார்கள்.
(கலப்பு நடையைத் தவிர்த்து தமிழில் எழுதுக).

14. ஊன் – ஊண்
(பொருள் வேறுபாடறிக).

15. இரவுப் பகல் பாரதுப் படித்தேன்; தேர்ச்சிப் பெற்றேன்.
(வல்லின மெய்களை நீக்கி எழுதுக.)

16. வெல்லம் –– வெள்ளம்
(மயங்கொலி அறிந்து பொருள் தருக).

17. ஏறிகளில் மலைநீர் சேமித்தாள் கிணருகளில் நீர் வற்றாது.
(தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக).

18. பாரியின் ஆருயிர் நண்பர் கபிலர்.
(ஏற்ற வினா அமைக்கவும்)

19. இந்தக் கோலத்தில் உன்னைக் கண்ட என் கண்களைப் பறித்தெறியாத பாவியேன் நான்.
(இவ்வாக்கியத்தில் பயின்று வரும் இலக்கியச் சுவை யாது).

20. நானிலம் – (தொகைச் சொல்லை விரித்து எழுதுக)

www.kalvisolai.com

## பகுதி – II

**பின்வரும் வினாக்களுள் வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். மீதமுள்ள 21 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடை தருக.** 7 x 2 = 14

21. ஔவையார் கல்வியின் சிறப்பாகக் கூறுவது யாது?

22. பொருட்சுவை எத்தனை?. அவை யாவை?.

23. பட்டினத்தடிகள் போற்றிய மூவர் யாவர்?.

24. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் இளமையில் கேட்டதாகக் கூறும் முடிமக்கள் கதைகள் யாவை?.

25. மனதிற்குத் தெம்பு தரும் செயல்களாக அறிஞர் அண்ணா கூறுவன யாவை?.

26. சமயம் என்ற சொல்லின் பொருள் ஆழத்தைக் குன்றக்குடி அடிகளார் எவ்வாறு கூறுகிறார் ?

27. “நடுகல்“ என்பது யாது?.

28. குடும்பத் தலைவியின் முதற்கடமை என்று ஆசிரியர் கூறுவது யாது?.

29. “சமனிலை“ குறித்து ந.மு.வேங்கடசாமி நாட்டார் கூறுவது யாது?.

30. பண்டைத் தமிழக மக்களின் இறைவழிபாட்டு முறையை நெடுநல்வாடை எவ்வாறு குறிப்பிடுகிறது?.

## பகுதி – III

**பின்வரும் வினாக்களுள் வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். மீதமுள்ள 31 முதல் 39 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடை தருக.** 7 x 3= 21

31. அழியாச் செல்வமாகிய கல்வியைப் பயன்படுத்தும் முறை யாது?.

32. கங்கை வேடனும் காளத்தி வேடனும் இறைவனுக்கு அளித்த காணிக்கைகள் யாவை?

33. மெய்க்கீர்த்தி – குறிப்பு வரைக.

34. ஒய்வு நேரம் ஒவ்வொரு நாட்டிலும் எவ்வாறு அமைந்துள்ளது?

35. "சமயங்களின் ஒருமித்த குரல்" என குன்றக்குடி அடிகளார் கூறுவன யாவை?

36. சிலாசாசனங்கள் எனப்படுவன யாவை?

37. பண்டைத் தமிழக மகளிரின் விருந்தோம்பல் பண்பினை விளக்குக.

38. முதுகுடிப் பிறந்த மகளிருக்கும் வீர உணர்ச்சி மிகுந்திருந்தது என்பதனை சான்றுடன் நிறுவுக.

39. பழந்தமிழன் வாய்ப்பந்தல் போடவில்லை என்பதை தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் எவ்வாறு மெய்ப்பிக்கிறார்?

40. சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியமே! –– காரணம் தந்து விளக்குக.

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக 7 x 5= 35

41. "ஒரு நாள் கழிந்தது" என்னும் கதையை ஒரு பக்க வடிவில் சுருக்கமாக எழுதுக.

(அல்லது)

"மறுமணம்" என்னும் கதையை ஒரு பக்க வடிவில் சுருக்கமாக எழுதுக.

42. "ஒரு பிரமுகர்" என்னும் கதையில் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடக வடிவில் எழுதுக.

(அல்லது)

"செங்கமலமும் ஒரு சோப்பும்" என்னும் கதையில் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடக வடிவில் எழுதுக.

43. "அனுமதி" என்னும் கதையில் பாலாஜி என்ற பாத்திரத்தை ஆய்வு செய்க.

(அல்லது)

"சங்கரன்" கதாபாத்திரத்தைக் "கரையும் உருவங்கள்" என்ற கதையின்

www.kalvisolai.com

வழியில் திறனாய்வு செய்க.

44. “கைலாசம்“ தொண்டு செய்து உயர்ந்ததாக நும் கற்பனை கலந்து ஒரு கதை எழுதுக.

(அல்லது)

உன் உறவினர் ஒருவரின் முகவரியைத் தொலைத்துவிட்டு வீட்டைக் கண்டுபிடிக்க நீவிர் பட்ட துயரங்களைக் கற்பனையாக எழுதுக.

45. பின்வரும் பாடலைப் படித்து ஆசிரியர் குறிப்பு, திரண்ட கருத்து, மையக் கருத்து ஆகியவற்றை எழுதுக.

தாயென அன்பு செய்து
தந்தைபோல் பரிந்து, சொந்தச்
சேயென அணைத்துப் பேசி
செவ்விய அறிவு கூறி

தூயநன் னடத்தை கற்கத்
துணையென நடந்து காட்டும்
ஆயநற் குணமுள் ளோனே
ஆசானென் றழைக்கத் தக்கோன்.

—— நாமக்கல் கவிஞர்

(அல்லது)

பின்வரும் பாடலில் அமைந்துள்ள நயங்களில் ஏதேனும் ஐந்தை (எதுகை, மோனை, இயைபு, முரண், சந்தம், அணி) மட்டும் விளக்கி எழுதுக.

நீலத் திரைகடல் ஓரத்திலே – நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை வட
மாலவன் குன்றம் இவற்றிடையே – புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு

கல்வி சிறந்த தமிழ்நாடு —— புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு – நல்ல
பலவித மாயின சாத்திரத்தின் – மனம்
யாரெங்கும் வீசுந் தமிழ்நாடு

—— பாரதியார்

**46.** பழமொழியை விளக்கி, வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

"வரும்முன் காப்போம்"

(அல்லது)

"வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்"

(அல்லது)

கீழ்க்காணும் தலைப்பில் (மரபு/புது) கவிதை எழுதுக.

"இயற்கை"

(அல்லது)

"மனித நேயம்"

**47.** தமிழாக்கம் தருக.

அ. A little stream will drive a light mill

ஆ. An artist lives everywhere.

இ. Think before you speak

ஈ. Health is wealth

உ. As is the king so are his subjects.

(அல்லது)

அ. Education should develop and promote good values.

ஆ. Please confirm your exam result by your cell phone.

இ. Students want to join computer courses.

ஈ. The Government announced some schemes.

உ. To good people world appears good.

----------